பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

20. 05. 2024 7. 15

திங்கட்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

1. மக்களவைக்கு 5வது கட்டமாக 49 தொகுதிகளில் பலத்த பாதுகாப்புடன் வாக்குப்பதிவு தொடங்கியது.

2. இடஒதுக்கீடு மற்றும் அரசியல் சாசனம் குறித்து எதிர்க்கட்சிகள் மக்களிடையே தவறான பிரச்சாரத்தை மேற்கொண்டு வருவதாக பிஜேபி மூத்த தலைவரும், உள்துறை அமைச்சருமான திரு. அமித் ஷா குற்றம் சாட்டியுள்ளார்.

3. எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி வெற்றி பெற்று மத்தியில் ஆட்சியமைத்தால், இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்த அதிக முக்கியத்துவம் அளிக்கப்படும் என்று சமாஜ்வாதி கட்சித் தலைவர் திரு. அகிலேஷ் யாதவ் கூறியுள்ளார்.

4. ஈரான் அதிபர் பயணம் செய்து விபத்துக்குள்ளான ஹெலிகாப்டரை தேடும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

5. மாற்றுத்திறனாளிகளுக்கான உலக தடகள சாம்பியன் போட்டியில் இந்தியாவின் நிஷத் குமார் உயரம் தாண்டுதலில் வெள்ளிப் பதக்கம் வென்றார்.

*---- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

மக்களவைக்கு 5வது கட்டமாக 6 மாநிலங்கள், இரண்டு யூனியன்பிரதேசங்களுக்கு உட்பட்ட 49 தொகுதிகளில் இன்று காலை வாக்குப்பதிவு தொடங்கியது.

உத்தரப்பிரதேசத்தில் 14 தொகுதிகளிலும், மகாராஷ்டிராவில் 13, மேற்குவங்கத்தில் 7, பீஹார் மற்றும் ஒடிசாவில் தலா 5, ஜார்கண்டில் 3, ஜம்மு-கஷ்மீர் மற்றும் லடாக்கில் தலா ஒரு தொகுதியிலும் வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

இதற்காக 94 ஆயிரத்து 732 வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

9 லட்சத்து 47 ஆயிரத்திற்கும் கூடுதலான தேர்தல் பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

காலை 7 மணிக்கு தொடங்கிய வாக்குப்பதிவு, மாலை 6 மணியுடன் நிறைவடைகிறது.

இன்று வாக்குப்பதிவு நடைபெறும் தொகுதிகளில் மத்திய அமைச்சர்கள் திரு. ராஜ்நாத் சிங் போட்டியிடும் லக்னோ, திரு. பியூஷ் கோயல் போட்டியிடும் மும்பை வடக்கு, திருமதி ஸ்மிருதி இரானி போட்டியிடும் அமேதி, காங்கிரஸ் மூத்த தலைவர் திரு. ராகுல் காந்தி போட்டியிடும் ரேபரேலி, முன்னாள் முதலமைச்சர் திரு. உமர் அப்துல்லா

போட்டியிடும் பாரமுல்லா உள்ளிட்டவை முக்கியமான தொகுதிகள் ஆகும்.

தேர்தலை அமைதியாகவும், நேர்மையாகவும் நடத்தி முடிக்க அனைத்து ஏற்பாடுகளையும் தேர்தல் ஆணையம் செய்துள்ளது.

தேர்தல் நடைபெறும் தொகுதிகளை ஒட்டிய 216 சர்வதேச எல்லைகளும், மாநிலங்களுக்கு இடையிலான 565 சோதனைச்சாவடிகளிலும் சட்டவிரோதமாக மது, போதைப்பொருட்கள், பணம் மற்றும் இலவசப் பொருட்களின் வினியோகத்தை தடுக்க தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வருகிறது.

கடந்த 4 கட்டங்களாக 379 மக்களவைத் தொகுதிகளுக்கு வாக்குப்பதிவு அமைதியாகவும், சுமுகமாகவும் நடைபெற்றுள்ளது.

<<<<>>>>

ஒடிசா மாநிலத்தில 5 மக்களவைத் தொகுதிகளுடன் 35 சட்டப்பேரவை தொகுதிகளுக்கும் இன்று வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

பிஜு ஜனதாதள கட்சித் தலைவரும், முதலமைச்சருமான திரு. நவீன் பட்நாயக் 6வது முறையாக தேர்தல் களத்தில் நிற்கிறார்.

77 வயதான திரு. நவீன் பட்நாயக், **Ganjam** மாவட்டத்தில் உள்ள **Hinjili** மற்றும் பாலாங்கிர் மாவட்டத்தில் உள்ள **Kantabanji** ஆகிய இரு சட்டப்பேரவைத் தொகுதிகளில் போட்டியிடுகிறார்.

இம்மாநிலத்தில் தேர்தல் நடைபெறும் தொகுதிகளில் மத்திய ரிசர்வ் காவல்படையினர் மாநில காவல்துறையுடன் இணைந்து பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இன்று வாக்குப்பதிவு நடைபெற உள்ள மொத்தமுள்ள தொகுதிகளில் 20 சதவீத தொகுதிகள் நக்சல் தீவிரவாதிகள் நடமாட்டம் உள்ள பகுதிகளைச் சேர்ந்தவை என்பதால் அங்கு கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

<<<<>>>>

மக்களவைக்கு எஞ்சியுள்ள 6வதுறும் 7ஆம் கட்ட தேர்தல் நடைபெறும் தொகுதிகளில் அரசியல் கட்சித் தலைவர்களின் பிரச்சாரம் தீவிரமாக நடைபெற்று வருகிறது.

ஆறாம் கட்ட தேர்தல் இம்மாதம் 25ஆம் தேதியும், 7வது கட்ட தேர்தல் அடுத்த மாதம் 1ஆம் தேதியும் நடைபெறவுள்ளது.

பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி நேற்று ஜார்கண்ட் மற்றும் மேற்குவங்க மாநிலங்களில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டங்களில் உரையாற்றினார்.

ஜம்ஷெட்பூரில் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், வர்த்தகர்களையும், முதலீட்டாளர்களையும் எதிர்ப்பதையே நோக்கமாகக் கொண்டிருந்தால், இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை எப்படி ஏற்படுத்த முடியும் என்று காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகளுக்கு அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

தமது அரசு நாட்டின் வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் அளித்ததாகவும், முதலீட்டாளர்களுக்கு உகந்த சூழ்நிலையை ஏற்படுத்தியதாகவும் அவர் தெரிவித்தார்.

காங்கிரஸ் மூத்த தலைவர் திரு. ராகுல் காந்தி நேற்று உத்தரப்பிரதேச மாநிலத்தில் சமாஜ்வாதி கட்சித் தலைவர் திரு. அகிலேஷ் யாதவுடன் இணைந்து தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டார்.

அலகாபாத் தொகுதியில் நடைபெற்ற கூட்டத்தில் பேசிய திரு. ராகுல் காந்தி மத்தியில் ஒருங்கிணைந்த எதிர்க்கட்சிகளின் கூட்டணி வெற்றி பெற்றவுடன் அலகாபாத் மக்களவைத் தொகுதியின் வளர்ச்சிப் பணிகள் வேகப்படுத்தப்படும் என்று கூறினார்.

பின்தங்கிய பகுதிகளில் புதிய தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்படும் என்றும் அவர் உறுதியளித்தார்.

தற்போதுள்ள அரசியல் சாசனத்தைப் பாதுகாக்க எதிர்க்கட்சிகள் போராடி வருவதாக இந்தக் கூட்டத்தில் பேசிய சமாஜ்வாதி கட்சித் தலைவர் திரு. அகிலேஷ் யாதவ் கூறினார்.

இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்த தங்களது கூட்டணி அதிக முக்கியத்துவம் அளிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

பிஜேபி மூத்த தலைவர்களில் ஒருவரும், உள்துறை அமைச்சருமான திரு. அமித் ஷா, **Phulpur, Prayagraj** ஆகிய இடங்களில் பிரச்சாரம் மேற்கொண்டார்.

அப்போது பேசிய அவர், பிரதமர் திரு. நரேந்திர மோடி மூன்றாவது முறையாக பிரதமராக பொறுப்பேற்க வேண்டும் என்று நாட்டு மக்கள் விரும்புவதாக கூறினார்.

இடஒதுக்கீடு மற்றும் அரசியல் சாசனம் குறித்து எதிர்க்கட்சிகள் மக்களிடையே தவறான பிரச்சாரத்தை மேற்கொண்டு வருவதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

ஐக்கிய ஜனதாதள தலைவரும், பீகார் முதலமைச்சருமான திரு. நிதிஷ் குமார் அம்மாநிலத்திற்கு உட்பட்ட வைஷாலி, கோபால்கஞ்ச் மற்றும் சிவான் ஆகிய மக்களவைத் தொகுதிகளில் நேற்று பிரச்சாரத்தில் ஈடுபட்டார்.

<<<<>>>>

தலைநகர் தில்லியில் அமைந்துள்ள மக்களவைத் தொகுதியில் இம்மாதம் 25ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெற உள்ள நிலையில் பிஜேபி, காங்கிரஸ், ஆம் ஆத்மி கட்சிகள் தீவிரமான பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளன.

வேட்பாளர்களை ஆதரித்து பொதுக்கூட்டங்கள், பேரணிகள், திறந்த வாகனத்தில் ஊர்வலமாகச் சென்று வாக்காளர்களை சந்திப்பது என அரசியல் கட்சித் தலைவர்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

தில்லியில் 7 தொகுதிகளிலும் பிஜேபி தனித்துப் போட்டியிடுகிறது.

காங்கிரஸ் மற்றும் ஆம் ஆத்மி கட்சிகள் முதல் முறையாக கூட்டணி அமைத்து போட்டியிடுகின்றன.

<<<<>>>>

ஈரான் அதிபர் திரு. இப்ராஹிம் **Raisi,** பயணம் செய்த ஹெலிகாப்டர் மோசமான வானிலையால் விபத்துக்குள்ளானதை அடுத்து, ஹெலிகாப்டரை தேடும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

அஜர்பைஜானை ஒட்டிய எல்லைப் பகுதியில் அமைந்துள்ள ஒரு அணையின் திறப்பு விழாவில் நேற்று கலந்துகொண்ட அதிபர், பின்னர் ஹெலிகாப்டர் மூலம் தலைநகர் டெஹ்ரான் திரும்பிக்கொண்டிருந்தார்.

அப்போது கடுமையான மேகமூட்டம் காணப்பட்டதால் ஹெலிகாப்டர் தொடர்ந்து பயணிக்க முடியாமல் வனப்பகுதியில் தரையிறக்கப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

மோசமான வானிலை காரணமாக ஹெலிகாப்டரை தேடும் பணி நேற்று தடைபட்டது.

இந்நிலையில் ஈரான் அதிபர் திரு. இப்ராஹிம் ரெய்சி, பயணம் செய்த ஹெலிகாப்டர் விபத்துக்குள்ளான தகவல் அறிந்து பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளார்.

இந்த துயரமான நேரத்தில் ஈரான் மக்களுக்கு இந்தியா துணைநிற்கும் என்றும், அதிபர் பாதுகாப்புடன் திரும்ப தாம் பிரார்த்தித்துக்கொள்வதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதற்கிடையே ஹெலிகாப்டரை தேடி கண்டுபிடிக்கும் பணியில் ஈரானுக்கு உதவ துருக்கி உள்ளிட்ட பல நாடுகள் முன்வந்துள்ளன.

ஈரான் அதிபர் பாதுகாப்புடன் திரும்பி வர நாட்டு மக்கள் அனைவரும் பிரார்த்தனை செய்ய வேண்டும் என்று ஈரான் உயர்தலைவர் திரு. **Ayatollah Ali Khamenei** கேட்டுக்கொண்டுள்ளார்.

எது நடந்தாலும் ஈரான் மக்கள் அச்சப்படத் தேவையில்லை என்றும், நாட்டின் நிர்வாகம் தடையின்றி நடைபெறும் என்றும் அவர் கூறியுள்ளார்.

<<<<>>>>

உதகமண்டலத்தில் நடைபெற்று வந்த ரோஜா மலர்க் கண்காட்சி மேலும் 3 நாட்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

சுற்றுலாப் பயணிகள் வருகை தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில், கண்காட்சி நீட்டிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

கேரளாவில் அடுத்த 6 நாட்களுக்கு இடி மின்னலுடன் கூடிய கனமழை தொடரும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

பத்தனம்திட்டா, ஆலப்புழா, கோட்டயம், இடுக்கி ஆகிய 4 மாவட்டங்களில் அடுத்த 2 நாட்களுக்கு பலத்த மழை பெய்யும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

திருவனந்தபுரம், கொல்லம், எர்ணாகுளம் மாவட்டங்களிலும் பலத்த மழைக்கு வாய்ப்புள்ளதாக இந்திய வானிலை மையம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் தமிழகத்தில் சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு உள்ளிட்ட 10 மாவட்டங்களில் அடுத்த 3 மணி நேரத்தில் மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

ஜப்பானில் கோபே நகரில் நடைபெற்று வரும் மாற்றுத்திறனாளிகளுக்கான உலக தடகள சாம்பியன் போட்டியில் இந்தியாவின் நிஷத் குமார் உயரம் தாண்டுதலில் வெள்ளிப் பதக்கம் வென்றார்.

டோக்கியோவில் நடைபெற்ற மாற்றுத்திறனாளிகளுக்கான ஒலிம்பிக் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற இவர், நேற்றைய போட்டியில் ஒன்று புள்ளி ஒன்பது ஒன்பது மீட்டர் உயரம் தாண்டினார்.

இதன்மூலம் இப்போட்டியில் இந்தியாவுக்கு முதல் பதக்கத்தை அவர் பெற்றுக்கொடுத்துள்ளார்.

மகளிர் 200 மீட்டர் ஓட்டத்தில் ப்ரீத்தி பால் வெண்கலப் பதக்கம் வென்றார்.

<<<<>>>>

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் ராஜஸ்தான் - கொல்கத்தா அணிகளுக்கு இடையே நேற்று குவஹாத்தியில் நடைபெற இருந்த கடைசி லீக் ஆட்டம் மழை காரணமாக கைவிடப்பட்டது.

இதையடுத்து இரு அணிகளுக்கும் தலா ஒரு புள்ளி பகிர்ந்தளிக்கப்பட்டது.

லீக் போட்டிகள் முடிவடைந்துள்ள நிலையில், நாளை அகமதாபாதில் நடைபெற உள்ள முதல் பிளே ஆஃப் சுற்று ஆட்டத்தில் கொல்கத்தா – ஹைதராபாத் அணியை எதிர்கொள்கிறது.

நாளை மறுநாள் நடைபெற உள்ள இரண்டாவது பிளே ஆஃப் சுற்றுப் போட்டியில் ராஜஸ்தான் - பெங்களூரு அணியை எதிர்த்து விளையாட உள்ளது.

**<<<<The End>>>>**